# DEPOSITION OF WITNESS.
## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR
## S.C. No. 56/2023
## PROSECUTION WITNESS No - 17

| | | | |
|---|---|---|---|
| **Name** | : சண்முகம் | **Caste** | : |
| **Father Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of December 2025.**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜராகியுள்ளார்கள்.) (1முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜரில்லை.)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது ஆண்டான்கோவில் கிழக்கில் கிராமநிர்வாக அலுவலகராக பணிபுரிந்தேன். கடந்த 10.09.2022 ஆம் தேதி குப்பம்கிராமத்தில் கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிநதேன். அன்னை புளுமெட்டல் கிரசர்ஸ் என்ற நிறுவனம் குப்பம் கிராம எல்லைக்குள் அமைந்துள்ளது. சம்பவத்தில் இறந்துபோன ஜெகநாதனின் தோட்டம் குப்பம் கிராமத்தில் உள்ளது. அன்னை புளுமெட்டல் கிரசர்ஸ் குப்பம் கிராமம் சர்வே எண்.453/2, 453/3 என்றதில் கிரசர்ஸ் உள்ளது. ஜெகநாதனின் தோட்டங்கள் குப்பம்கிராமத்தில் சர்வே எண்.456, 458, 459, 448 ஆகிய சர்வே எண்களில் அமைந்துள்ளது.

ஜெகநாதனின் விவசாய நிலம் மற்றும் தோட்டம், வீடும் மேற்சொன்ன சர்வே எண்களில் தான் அமைந்துள்ளது.

ஜெகநாதனின் விவசாய நிலம், தோட்டம், வீடு ஆகியவை அன்னை புளூமெட்டல்ஸ் கிரசர்ஸ் இடத்திற்கு தோராயமாக 400, 500 மீட்டர் தள்ளி அமைந்துள்ளது. சம்பவம் நடந்த இடம் குப்பம் கிராமத்திற்குள் அமைந்துள்ளது. சம்பவம் நடந்த இடத்திற்கு அருகில் உள்ள காடு சண்முகம் என்பவருக்கு சொந்தமானது. மேற்சொன்ன இடம் சர்வே எண்.407/1–ல் அமைந்துள்ளது. **மேற்சொன்ன சண்முகத்தினுடைய காட்டின் வரைபடம் சர்வே எண் 407/1 க்கு கணினி வரைபடம் இதுதான். அது அ.சா.ஆ.32 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 407/1க்கு உரிய கணினி பட்டா இது தான். அது அ.சா.ஆ.33 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்னை புளூமெட்டல் கிரசர்ஸ் குப்பம் கிராமம் சர்வேஎண்.682ல் அமைந்துள்ள இடத்தில் தான் குவாரி லீசுற்கு மனு செய்திருந்தார்கள். காவல்துறையினர் மேற்சொன்ன இடங்களை குறித்து என்னை விசாரித்தார்கள்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2025.12.08 17:51:46 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR

## S.C. No. 56/2023

## PROSECUTION WITNESS No - 18

| | | | |
|---|---|---|---|
| **Name** | **:** உதயகுமார் | **Caste** | **:** |
| **Father/ Husband Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Religion** | **:** |
| **Taluk** | **:** | **Age** | **:** |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of December 2025.**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜராகியுள்ளார்கள்.) (1முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜரில்லை.)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிகிறேன். இதற்கு முன்பு கடந்த 10.09.2022 ஆம் தேதி கே.பரமத்தி காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது மண்மங்களம் தாலுக்கா, மாரிக்கவுண்டன் பாளையம், ஜெகநாதன் மனைவி ரேவதி நிலையம் ஆஜராகி எழுத்துமூலமான புகாரை 23.30 மணிக்கு கொடுத்த புகாரை பெற்று நிலையக்குற்ற எண்.115/2022, ச.பி.302 இ.த.ச. வின் படி

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்படி அசல் புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் மு.நி.கா. 705 கிருபாகரன் என்ற காவலரிடம் விரைவு தபால் மூலம் குற்றவியல் நீதித்துறை நடுவர் கிருஷ்ணராயபுரம் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இதர பிரதிகளை சம்மந்தப்பட்ட மற்ற உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தும், முதல் தகவல் அறிக்கையின் ஒரு பிரதியை புலன்விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கும் வைத்தேன். **மேற்சொன்ன புகார் இதுதான். அது ஏற்கனவே அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை இதுதான். அது ஏற்கனவே அ.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.08 17:51:54 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS.**

**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR**

**S.C. No. 56/2023**

**PROSECUTION WITNESS No - 19**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | **:** | ராதாகிருஷ்ணன் | **Caste** | **:** | |
| **Father/ Husband Name** | **:** | | **Calling** | **:** | |
| **Village** | **:** | | **Religion** | **:** | |
| **Taluk** | **:** | | **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of December 2025.**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜராகியுள்ளார்கள்.) (1 முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜரில்லை.)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை :</u>**

நான் தற்போது காவல்துணை கண்காணிப்பாளராக ஊழல் மற்றும் கண்காணிப்பு பிரிவில் புதுக்கோட்டையில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.09.2022 ஆம் தேதி கரூர் மாவட்டம், க.பரமத்தி காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது நிலையக்குற்ற எண்.115/2022, ச.பி.302 இ.த.ச. முதல் தகவல் அறிக்கையினை பெற்றுக்கொண்டேன். **<u>அந்த முதல்</u>**

**தகவல் அறிக்கை இதுதான் அது ஏற்கனவே அ.சா.ஆ.24 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** மேற்சொன்ன முதல் தகவல் அறிக்கையை உதவி ஆய்வாளர் திரு.உதயகுமாரிடமிருந்து பெற்றுக்கொண்டு நான் புலன் விசாரணையை தொடங்கினேன். 11.09.2022 அன்று சம்பவ இடமான குப்பமிலிருந்து – காருடையாம்பாளையம் செல்லும் வழியில் உள்ள தூள்சண்முகம் என்பவரது காட்டிற்கு சென்று சாட்சிகள் பொன்னுசாமி, ராஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஒரு பார்வை மகஜரும், மாதிரிவரைபடமும் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் இதுதான் அது ஏற்கனவே அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வரைபடம் இதுதான் அது அ.சா.ஆ.34 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினம் 7.00 மணிக்கு சம்பவ இடத்திலிருந்து TN47AV3133 என்ற எண்ணுள்ள Honda Shine இருசக்கர வாகனத்தை, TN47BY2877 என்ற மகேந்திரா பிக்கப் வேனையும் மற்றும் மகேந்திரா பிக்கப் வாகனத்திலிருந்த பதிவு சான்றிதழின் புகைப்பட நகல் மற்றும் சம்பவ இடத்திலிருந்து இரத்தம் படிந்த மண், இரத்தம் படியாத மண் ஆகியவற்றை மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றி ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தேன். அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **அந்த கைப்பற்றுதல் மகஜர் இது தான். அது அ.சா.ஆ.14 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. TN47AV3133 என்ற பதிவெண் கொண்ட Honda Shine வாகனத்தின் புகைப்படம் ஏற்கனவே அ.சா.ஆ.4 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது. TN47BY2877 என்ற பதிவெண் கொண்ட மகேந்திரா பிக்கப் வாகனத்தின் புகைப்படம் ஏற்கனவே அ.சா.ஆ.5 ஆக குறியிடு செய்யப்பட்டுள்ளது. இரத்தம் படிந்த மண் இதுதான். அது ஏற்கனவே அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இரத்தம் படியாத மண் இதுதான். அது ஏற்கனவே அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.**

பின்பு சம்பவ இடத்திலிருந்த பொன்னுசாமி, புவனேஷ்வரன், சந்தோஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு கரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அன்றைய தினம் காலை 8.45 முதல் 10.45 மணி வரை இறந்த ஜெகநாதன் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்களுக்கு சம்மன் சார்வு செய்து பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். **அந்த பஞ்சாயத்தார்களுக்கு சார்வு செய்த சம்மன்களுடன் கூடிய பிரேத விசாரணை அறிக்கை இது தான். அது அ.சா.ஆ.35 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு ஜெகநாதனின் பிரேதத்தை பிரேத விசாரணை செய்ய வேண்டி மு.நி.கா 1534 மாதேஷ்வரனை நியமித்து அவரிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை ஒப்படைத்தேன். பின்னிட்டு சாட்சிகள் ரேவதி, மோகன், காளியம்மாள், அபிஷேக், முருகானந்தம், பொன்னுசாமி, புவனேஷ்வரன், சந்தோஷ், பொன்னுசாமி த/பெ.பொன்னப்பகவுண்டர், ராஜ்குமார் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்களை பதிவு செய்தேன். பின்பு சம்பவம் நடைபெற்றது உண்மை எனத்தெரிய வந்ததால் கிடைத்த தகவலின் படி 11.09.2022 ஆம் தேதி மதியம் 1.30 மணிக்கு இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட ஆஜர் எதிரிகள் சக்திவேல் த/பெ.குமாரசாமி, பாலிக்காடு, ராமரெட்டிப்பட்டி ஓமலூர் தாலுக்கா, சேலம் மாவட்டம் (ஆஜர் எதிரி சக்திவேலை சரியாக அடையாளம் காண்பித்தார்.) ஆஜர் எதிரி ரஞ்சித்குமார், வயது 43, த/பெ.பூபாலன், காவலூர், ஆற்காடு தாலுக்கா, ராணிப்பேட்டை மாவட்டம். (ஆஜர் எதிரி ரஞ்சித்குமாரை சரியாக அடையாளம் காண்பித்தார்.) ஆகியோர்களை காருடையாம்பாளைம் பஸ் ஸ்டாப் அருகே காரணம் கூறி கைது செய்தேன். அப்போது அங்கு வரவழைக்கப்பட்ட சரவணா,(அ.சா.6) வயது 44, கிராமநிர்வாக அலுவலர், பவித்திரம் ராஜாமணி, கிராம உதவியாளர்,

பவித்திரம் ஆகியோர்களை வரவழைத்து அவர்கள் முன்னிலையில் 11.09.2022 ஆம் தேதி மதியம் 1.45 மணிக்கு மேற்சொன்ன எதிரிகளை நான் விசாரித்தேன். அப்போது ஆஜர் எதிரி சக்திவேல் கொடுத்த ஒரு ஒப்புதல் வாக்குமூலத்தினை மேற்சொன்ன சாட்சிகள் முன்பு பதிவு செய்தேன். பின்பு அன்றைய தினம் மதியம் 03.45 மணிக்கு கிடைத்த தகவலின் படி பரமத்தியிலிருந்து – ஓணப்பாளைம் செல்லும் வழியில் தோகைமுருகன் அவென்யூ அருகில் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட ஆஜர் எதிரி செல்வக்குமார் (ஆஜர் எதிரி செல்வக்குமாரை சரியாக அடையாளம் காண்பித்தார்.) அவர்களை கைது செய்தும், அதே சாட்சிகள் முன்னிலையில் மதியம் 3.50 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் மேற்சொன்ன செல்வக்குமார் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். 11.09.2022 ஆம் தேதி 5.30 மணிக்கு கைது செய்த எதிரிகளை நிலையம் கொண்டு பாராக்காவல் வசம் ஒப்படைத்தேன். பின்னர் மேற்சொன்ன எதிரிகளை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் 12.09.2022 ஆம் தேதியன்று துரித தபாலை எடுத்துச்சென்ற 703 காவலர் திரு.பிரபாகரனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட சாட்சிகளான புவனேஷ்வரன், சந்தோஷ் ஆகியோர்களை குவிமுச 164 பிரிவு வாக்குமூலம் பெற கனம் உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் அரவக்குறிச்சி அவர்களுக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து அனுப்பினேன். மேலும் இவ்வழக்கில் 13.09.2022 ஆம் தேதி கரூர் மாவட்டம் காவல் கண்காணிப்பாளர் அவர்களின் செயல்முறை ஆவண எண்.C.No.189/Camp/SP/KRR/2022 ஆணையின் படி இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வழக்கு கோப்புகளை தொடர் புலன்விசாரணைக்காக வேலாயுதம்பாளையம் காவல்ஆய்வாளர் திரு.ஜெயராம் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.08 17:52:03 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.

# DEPOSITION OF WITNESS.

## IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, KARUR

## S.C. No. 56/2023

## PROSECUTION WITNESS No - 20

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | ஜெயராமன் | **Caste** | : | |
| **Father/ Husband Name** | : | | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 08th day of December 2025.**

(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜராகியுள்ளார்கள்.) (1முதல் 3 எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜராகவில்லை.)

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை :**

நான் தற்போது காவல்துறை ஆய்வாளராக கரூர் மாவட்டம் தோகைமலை காவல்நிலையத்தில் பணிபுரிகிறேன். கடந்த 15.09.2022 ஆம் தேதி நான் வேலாயுதம்பாளையம் காவல்ஆய்வாளராக பணியிலிருந்த போது கரூர் மாவட்ட கண்காணிப்பாளரின் அவர்களின் செயல்முறை ஆணை எண்.C.No.189/Camp/SP/KRR/2022 ஆணையின் படி பரமத்தி காவல்நிலைய குற்ற எண்.115/2022 ச.பி.302 இ.த.ச. வழக்கினை

தொடர்புலன்விசாரணைக்காக எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 16.09.2022 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடமான குப்பம் – காருடையாம்பாளையம் ரோட்டில் தூள்சண்முகம் காட்டின் அருகில் சென்று சாடா்சிகள் பொன்னுசாமி மற்றும் ராஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டேன். ஏற்கனவே காவல் ஆய்வாளர் வரைபடம் தயார் செய்திருந்தார். அது சரியாக இருந்ததால் நான் மீண்டும் புதிதாக பார்வை மகஜரும், வரைபடமும் தயார் செய்யவில்லை. **<u>அந்த பார்வை மகஜர் இதுதான் அது ஏற்கனவே அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த வரைபடம் இதுதான் அது ஏற்கனவே அ.சா.ஆ.34 ஆக குறியீடு செய்யப்படுகிறது.</u>** நான் வாதி ரேவதி என்பவர் வீட்டிற்கு சென்று ரேவதி, பொன்னுசாமி, அபிஷேக், காளியம்மாள், மோகன், முருகானந்தம், மற்றொரு பொன்னுசாமி, ராஜ்குமார் ஆகியோர்களை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 16.09.2022 ஆம் தேதி 4.00 மணிக்கு பரமத்தி காவல்நிலையம் சென்று காவல்நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த பொலிரோ பிக்கப் வாகனம் TN47BY2877 என்ற பதிவு எண் வாகனத்தின் வலது புறம் இருந்த பேனட்டில் உறைந்த நிலையில் இருந்த ரத்தத்தை சுரண்டி எடுத்தேன். இரத்தக்கரை துகள்கள் சிறிதளவும், மருத்துவமனையில் காயத்திற்கு கட்டப்படும் துணி மூலம் நீரில் நனைத்து ஒத்தி எடுக்கப்பட்ட இரத்தக்கரையுடன் உள்ள துணி சிறிதளவு ஆகியவற்றை சாட்சிகள் பொன்னுசாமி, ராஜ்குமார் ஆகியோர் முன்னிலையில் ஒரு மகஜர் தாயர் செய்தேன். **<u>அந்த மகஜர் இதுதான். அது ஏற்கனவே அ.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரத்தக்கரையுடன் உள்ள துணி இதுதான். அது ஏற்கனவே அ.சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாகனத்தின் பேனட்டிலிருந்து எடுக்கப்பட்டட ரத்தத்துகள்கள் இது தான். அது ஏற்கனவே</u>**

**<u>அ.சா.பொ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.</u>** மேற்சொன்ன பொருட்களை படிவம் 91 மூலம் தயார் செய்து நீதிமனறத்திற்கு அனுப்பி வைத்தேன். **<u>அந்த படிவம் 91 இது தான். அது அ.சா.ஆ.36 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.</u>** மு.நி.கா. மாதேஷ்வரன் மூலம் மேற்சொன்ன பொருட்களை பகுப்பாய்விற்காக நீதிமன்றத்தின் உத்தரவுப்பெற்ற பகுப்பாய்விற்கு அனுப்பினேன். 17.09.2022 ஆம் தேதி சாட்சிகள் குணசேகரன், பெரியசாமி, கே.எம். சண்முகம் என்று தூள்சண்முகம் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். 18.09.2022 ஆம் தேதியன்று சாட்சிகள் புவனேஷ்வரன், சந்தோஷ், மூர்த்தி, ஸ்ரீதரன், மகேஷ் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 22.09.2022 ஆம் தேதி மோகன்ராஜ், சண்முகம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 24.09.2022 ஆம் தேதி பரமத்தி துணை வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி. நளினி, கரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு.அருண்பிரசாத், மருத்துவர் சங்கிதா, மு.நி.கா. மாதேஷ்வரன், உதவி ஆய்வார் உதயகுமார் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 27.09.2022 ஆம் தேதி மோட்டார வாகன ஆய்வாளர் சரவணனிடம் மோட்டார் வாகன ஆய்வு சான்று பெற்று அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். **அவர் வழங்கிய மோட்டார் வாகன ஆய்வு சான்றுகளான பொலிரோ பிக்கப் வானத்தன் சான்று இது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. Honda Shine வானத்தின் சான்று இது தான். அது ஏற்கனவே அ.சா.ஆ.22 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.** கரூர் புவியியல் இயக்குநர் திரு.ஜெயபால் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். கரூர் தடய அறிவியல் ஆய்வக உதவி இயக்குநர் திரு.பிரசாத் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு 07.10.2022 ஆம் தேதி தடய ஆய்வக உதவி

இயக்குநர் திரு.பிரகாஷ் என்பவர் க.பரமத்தி காவல்நிலையம் வந்து அங்கிருந்த மேற்சொன்ன TN47BY2877 என்ற மகேந்திரா பிக்கப் வாகனத்தின் முன்பக்க பம்பரிலிருந்து எடுக்கப்பட்ட பெயிண்ட் மாதிரி சிறிதளவு, மேற்படி வாகனத்தின் வலது பக்க முன்பத்திலிருந்து எடுக்கப்பட்ட பெயிண்ட் மாதிரி சிறிதளவு, மேற்படி வாகனத்தின் முன்பகுதியில் மோதலுக்கு உட்படாத இடத்திலிருந்து எடுக்கப்பட்ட பெயிண்ட் மாதிரி சிறிதளவும் மற்றும் மேலும் அவர் TN47AV3133 என்ற எண்ணுள்ள Honda Shine இருசக்கர வாகனத்தின் முன்பக்க Fork க்கிலிருந்த எடுக்கப்பட்ட பெயிண்ட் மாதிரி சிறிதளவு, இருசக்கர வாகனத்தின் Fork Rubber லிருந்து எடுக்கப்பட்ட பெயிண்ட் மாதிரி சிறிதளவு, இருசக்கர வாகனத்தின் முன்பக்கத்தில் மோதலுக்கு உட்படாத பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட பெயிண்ட் மாதிரி சிறிதளவு எடுத்தார். ஆகியவைகளை கைப்பற்றி படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **TN47BY2877 என்ற மகேந்திரா பிக்கப் வாகனத்தின் முன்பக்க பம்பரிலிருந்து எடுக்கப்பட்ட பெயிண்ட் மாதிரி சிறிதளவு, மேற்படி வாகனத்தின் வலது பக்க முன்பத்திலிருந்து எடுக்கப்பட்ட பெயிண்ட் மாதிரி சிறிதளவு, மேற்படி வாகனத்தின் முன்பகுதியில் மோதலுக்கு உட்படாத இடத்திலிருந்து எடுக்கப்பட்ட பெயிண்ட் மாதிரி சிறிதளவும் மற்றும் மேலும் அவர் TN47AV3133 என்ற எண்ணுள்ள Honda Shine இருசக்கர வாகனத்தின் முன்பக்க Fork க்கிலிருந்த எடுக்கப்பட்ட பெயிண்ட் மாதிரி சிறிதளவு, இருசக்கர வாகனத்தின் Fork Rubber லிருந்து எடுக்கப்பட்ட பெயிண்ட் மாதிரி சிறிதளவு, இருசக்கர வாகனத்தின் முன்பக்கத்தில் மோதலுக்கு உட்படாத பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட பெயிண்ட் மாதிரி சிறிதளவு ஆகியவை இவைதான் அவைகள் முறையே அ.சா.பொ.11 முதல் அ.சா.பொ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்சொன்ன படிவம் 91 இது**

<u>**தான். அது அ.சா.ஆ.37 ஆக குறியீடு செய்யப்படுகிறது**</u>. 08.11.2022 ஆம் தேதி மு.நி.கா. 1535 மாதேஷ்வர்ன், காவலர் 1745 பூபதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.11.2022 ஆம் தேதி கரூர் மருத்துவகல்லூரி மருத்துவமனை பேராசிரியர் சங்கீதா அவர்களிடம் இறுதி கருத்துரை பெற்று வாக்குமூலம் பதிவுசெய்தேன். <u>**அவர் வழங்கிய இறுதி கருத்துரை இதுதான். அது ஏற்கனவே அ.சா.ஆ.28 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**</u> அரவக்குறிச்சி குற்றவியல் நீதித்துறை நீதிமன்றத்தில் பணிபுரியும் ஆரோக்கிய சகாயமேரியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 15.12.2022 ஆம் தேதியன்று சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து பிரிவு 302 இ.த.ச விலிருந்து 120பி, 109, 302 மற்றும் 34 இ.த.ச. விற்கு பிரிவுகளை மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். <u>**அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை இதுதான். அது அ.சா.ஆ.38 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**</u> மேலும், சட்டப்பிரிவுகளுடன் 201 இ.த.ச. பிரிவையும் சேர்நது சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்திற்கு 30.12.2022 ஆம் தேதி அனுப்பி வைத்தேன். <u>**அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை இதுதான். அது அ.சா.ஆ.39 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**</u> மேலும் 30.12.2022 ஆம் தேதி குப்பம் கிராமம் கிராமநிர்வாக அலுவலரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 12.12.2022 ஆம் தேதியன்று தடய அறிவியல் துணை இயக்குநர் மற்றும் வேதியியல் ஆய்வாளர் திரு.அருணகிரி மற்றும் வடடார தடய அறிவியல் இணை இயக்குநர் ஜெயா அவர்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 01.02.2023 ஆம் தேதியன்று சென்னை வட்டார தடய அறிவியல் ஆய்வக இயக்குநர் லட்சுமிநாராயணனை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது விசாரணையை முடித்து 1 முதல் 3 எதிரிகள் மீது ச.பி.120பி, 109, 302, 201 உ/இ 34 இ.த.ச பிரிவுகளின்

கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். **சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெறப்பட்ட உடல் உள்ளுறுப்புகளின் பகுப்பாய்வு அறிக்கை இதுதான் அது அ.சா.ஆ.40 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ரத்தப்பகுப்பாய்வு அறிக்கை இது தான். அது அ.சா.ஆ.41 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ரத்த வகையிறா அறிக்கை இதுதான். அது அ.சா.ஆ.42 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உயிரியல் ஆய்வு அறிக்கை இது தான். அது அ.சா.ஆ.43 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பெயிண்ட் மாதிரிகளின் வேதியியல் ஆய்வு அறிக்கை இது தான். அது அ.சா.ஆ.44 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

**1ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.12.08 17:52:15 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.